# தகவல் உரிமைச் சட்ட விண்ணப்பம்,

அனுப்புநர்,

பெறுநர்,
பொது தகவல் அதகாரி
..........................................அலுவலகம்.,
..........................................
.......................................... பின் கோடு

ஐயா,

பொருள்: தகவலறியும் உரிமைச் சட்டம் 2005 - மக்களாட்சியின் தேவை அரசுகளும் அதன் அமைப்புகளும் மக்களுக்கு பதில் அளிக்கக்கடமைப் பட்டவைகளாக்குதல்

தங்கள் அலுவலகம் மற்றும் துறை சார்ந்த பின்வரும் தகவல்களை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

1) தங்கள் அலுவலகத்தில் தங்கள் துறையில் என்ன என்ன பயன்கள் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன என்ற தகவலையும் அந்த ஒவ்வொரு பயன்களையும் பெற விண்ணப்பதாரருக்கு என்ன என்ன தகுதிகள் இருக்கவேண்டும், விண்ணப்பத்தோடு என்னென்ன ஆவணங்கள் இணைத்து அனுப்பிடவேண்டும் என்னென்ன கட்டணம் எவ்வளவு, எந்த எந்த முறையில் யார் பெயருக்கு செலுத்தவேண்டும் என்ற தகவலையும், அந்தப் பயன்கள் எவை எவற்றிற்கு எந்த எந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்கவேண்டுமோ அந்த அதிகாரி பற்றிய தகவலையும்., அந்த பயன்களுக்கான ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தீர்வு செய்ய உரிய அதிகாரிக்கு விதிக்கப்பட்டக் காலக் கெடு என்னென்ன என்ற தகவலையும்., உரிய காலத்தில் தீர்வு கிடைக்காவிட்டால் மேல் முறையீடு அல்லது புகார் எந்த எந்த அலுவலருக்கு அனுப்பிடவேண்டும் என்ற தகவலையும் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

2) மேற்படி தகவல்கள் அடங்கிய கையேடுகள்., பிரசுரங்கள் ., ஆணைகள் ஆகியவற்றின் நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

3) தங்கள் அலுவலகத்தில் மற்றும் துறையில் வழங்கப்படும் பயன்கள் பத்தி 1-ல் உள்ளவற்றிற்காக செய்யப்படும் பொது மக்கள் விண்ணப்பங்கள் மீது எந்த எந்த நிலை அலுவலர்கள் எத்தனை நாட்களுக்குள் என்னென்னவிதமான நடவடிக்கைகளை எடுக்க கடமைப்பட்டவர்கள் என்ற தகவல்களை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

4) பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையில் அரசு ஆணை எண், 114. நாள் 2-08-2006 ஒளி நகலையும்., இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்க கடைசியாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

5) அதன்படி தங்கள் அலுவலகத்திற்கு .......................................... முதல் ...................................................... தேதி வரை வரப்பெற்ற மனுக்களில் எதாவது ஒரு பத்து மனுதாரர்கள் தொடர்புடைய கோப்புகளில் அரசு ஆணை எண் 114- ன் படி அந்த மனு வரப் பெற்றமைக்கு ஒப்புதல் சீட்டு, மனுதாரருக்கு அளிக்கப்பட்ட, இடைக்கால பதில் அளிக்கப்பட்ட, இறுதி பதில் ஆகியவற்றின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

6)	கடைசியாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் படி தங்கள் அலுலகத்திலும் தங்கள் எல்லையில் உள்ள தங்கள் சார்நிலை அலுவலகங்களில் இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்கப்பட்டதற்கு செய்யப்பட்ட செலவைக் காட்டும் செலவு சீட்டுகளின் ஒளி நகலையும், அந்த தகவல் பலகை தங்கள் அலுவலக பொருட்கள் பதிவேட்டில் எந்த பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதோ அந்த பக்கத்தின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

7)	அப்படி மேற்படி அலுவலகங்கள் ஏதாவது ஒன்றில் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டவைகளில் மேற்படி இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகைகள் இன்று வரை வைக்கப்படவில்லை என்றால் அப்படிப்பட்ட தகவல் பலகைகளை வைப்பதற்கு தங்கள் அலுவலகத்திற்கு தடையாக இருந்தக் காரணங்கள், அம்சங்கள் மற்றும் அரசு கடமையை செய்யாமைக்கு பொறுப்பான அலுவலர்களின் பட்டியலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

8)	நான் கோரிய தகவல்களை முழுமையாக அளிக்காமல் அல்லது தவறான அல்லது பொருத்தமற்ற தகவல் அளித்தால் அப்படி செய்யும் அலுவலருக்கு என்ன என்ன தண்டனையை அளிக்க வகை செய்யும் தகவல் உரிமைச் சட்டப்பிரிவின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விண்ணப்பத்தில் கோரிய தகவல்கள் ஏதும் தங்கள் அலுவலகத்தில் இல்லை எனில் இந்த விண்ணப்பத்தினை தகவல் உரிமைச் சட்டபிரிவு 6(3) ன் படி கையாள கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விண்ணப்பத்திற்கான ரூ 10 க்கான கோர்ட் கட்டண வில்லை ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,